www.surabooks.com

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 9ஆம் வகுப்பு

7 இயல்கள் கொண்ட புதிய பதிப்பு

**சிறப்பம்சங்கள்**

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளுக்கும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு பகுதி வினாக்கள் பிரிக்கப்பட்டு செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம் என அந்தந்த பகுதிகளில் புத்தக வினா என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினாக்கள் கூடுதலாக விடைகளுடன் உள்ளே தரப்பட்டுள்ளன.
- இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின் பகுதிகளுக்கான விடைகள் மற்றும் கூடுதல் கடிதங்கள், கட்டுரைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அனைத்து இயலுக்குரிய அலகு தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு – 2019, 2023, 2024 மற்றும் ஆண்டு பொதுத்தேர்வு – ஏப்ரல் 2023 & 2024 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி 2 மாதிரி வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG58

எழுதி வழங்கியவர்
கி. லதா, M.A., B.Ed., M.Phil.,

**Our Guides for X Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Maths (EM/TM )
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**Our Guides for XI & XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **சுராவின் தமிழ் உரைநூல்** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 9ஆம் வகுப்பு – தமிழ் உரைநூல் –** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 9ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

– பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பப்ளிகேஷன்ஸ்)

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

8-03-2025

www.surabooks.com

# பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
| --- | --- | --- | --- | --- |
| | | மனப்பாடச் செய்யுள் | 1-4 | |
| 1. | மொழி **அமுதென்று பேர்** | *தமிழ்விடு தூது **(செய்யுள்)** | 5-38 | ஜூன் |
| | | திராவிட மொழிக்குடும்பம் **(உரைநடை)** | | |
| | | தமிழோவியம் **(செய்யுள்)** | | |
| | | ஆறாம் திணை **(துணைப்பாடம்)** | | |
| | | எழுத்து - அளபெடை **(இலக்கணம்)** | | |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல் **உயிருக்கு வேர்** | நீரின்றி அமையாது உலகு **(உரைநடை)** | 39-76 | ஜூன் ஜூலை |
| | | *பெரியபுராணம் **(செய்யுள்)** | | |
| | | *புறநானூறு **(செய்யுள்)** | | |
| | | தண்ணீர் **(துணைப்பாடம்)** | | |
| | | பகுபத உறுப்பிலக்கணம் **(இலக்கணம்)** | | |
| 3. | பண்பாடு மனிதம் **உள்ளத்தின் சீர்** | ஏறு தழுவுதல் **(உரைநடை)** | 77-123 | ஆகஸ்டு |
| | | மணிமேகலை **(செய்யுள்)** | | |
| | | மார்கழிப் பெருவிழா **(செய்யுள்)** | | |
| | | தாய்மைக்கு வறட்சி இல்லை! **(துணைப்பாடம்)** | | |
| | | தொடர் இலக்கணம், ஆகுபெயர் **(இலக்கணம்)** | | |
| | | *திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| | | **முதல் இடைத் தேர்வு** | | |
| 4. | கல்வி **கசடற மொழிதல்** | கல்வியில் சிறந்த பெண்கள் **(உரைநடை)** | 124-161 | அக்டோபர் |
| | | குடும்ப விளக்கு **(செய்யுள்)** | | |
| | | *உயிர்வகை **(செய்யுள்)** | | |
| | | வீட்டிற்கோர் புத்தகசாலை **(துணைப்பாடம்)** | | |
| | | துணைவினைகள் **(இலக்கணம்)** | | |
| 5. | கலை, அழகியல், புதுமை **கலை பல வளர்த்தல்** | சிற்பக்கலை **(உரைநடை)** | 162-202 | |
| | | *இராவண காவியம் **(செய்யுள்)** | | |
| | | செய்தி **(துணைப்பாடம்)** | | |
| | | வல்லினம் மிகும் இடங்கள் **(இலக்கணம்)** | | |
| | | *திருக்குறள் **(வாழ்வியல்)** | | |


www.surabooks.com

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **வாழிய நிலனே** | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு **(உரைநடை)** | 203-236 | **ஜனவரி** |
| | | *சீவக சிந்தாமணி **(செய்யுள்)** | | |
| | | விண்ணையும் சாடுவோம் **(துணைப்பாடம்)** | | |
| | | வல்லினம் மிகா இடங்கள் **(இலக்கணம்)** | | |
| **இரண்டாம் இடைத் தேர்வு** | | | | |
| 7. | அறம், தத்துவம், சிந்தனை **என்தலைக் கடனே** | பெரியாரின் சிந்தனைகள் **(உரைநடை)** | 237-271 | **பிப்ரவரி** |
| | | *ஓ, என் சமகாலத் தோழர்களே! **(செய்யுள்)** | | |
| | | *யசோதர காவியம் **(செய்யுள்)** | | |
| | | மகனுக்கு எழுதிய கடிதம் **(துணைப்பாடம்)** | | |
| | | யாப்பிலக்கணம் **(இலக்கணம்)** | | |
| கூடுதல் கடிதங்கள் & கட்டுரைகள் | | | 272-280 | |
| சுராவின் இரண்டு மாதிரி வினாத்தாள்கள் (புதிய பாடநூலின்படி) | | | 281-284 | |

*குறியிடப்பட்டவை மனப்பாடப் பகுதி.

## மாணவச் செல்வங்களே... குறிப்பு :

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், பெட்டிச் செய்தி, நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம்.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.
- பாடப்பகுதியை கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.



www.surabooks.com

# மனப்பாடச் செய்யுள்

## கவிதைப் பேழை

இயல் – 1

### தமிழ்விடு தூது

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே.

★ ★ ★

இயல் – 2

காலாண்டுத் தேர்வு 2023, ஏப்ரல் 2024

### பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு ※
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்.

– சேக்கிழார்

★ ★ ★

### புறநானூறு

காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!

– குடபுலவியனார்

★ ★ ★



www.surabooks.com

இயல் - 3

# திருக்குறள்

## பொறையுடைமை

3. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்.
தகுதியான் வென்று விடல். ※ காலாண்டுத் தேர்வு 2019

## கேள்வி

7. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். ஏப்ரல் 2023, காலாண்டுத் தேர்வு 2023

## வினைத்தூய்மை

14. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

– திருவள்ளுவர்

★ ★ ★

இயல் - 4

# உயிர்வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

– தொல்காப்பியர்

★ ★ ★

இயல் - 5

# இராவண காவியம்

## மருதம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும். (72)

– புலவர் குழந்தை

★ ★ ★

www.surabooks.com

# திருக்குறள்

## குடிமை

4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

## சான்றாண்மை

அரையாண்டுத் தேர்வு 2023

5. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

## நாணுடைமை

8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

## உழவு

அரையாண்டுத் தேர்வு 2019

9. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

– திருவள்ளுவர்

★ ★ ★

இயல் - 6

# சீவக சிந்தாமணி

## தலை வணங்கி விளைந்த நெற்பயிர்

ஏப்ரல் 2023

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

– திருத்தக்க தேவர்

★ ★ ★

www.surabooks.com

இயல் - 7

## ஓ, என் சமகாலத் தோழர்களே!

பாய்ந்து பரவும் இளைய நதிகளே
பள்ளம் நிரப்ப வாருங்கள்
காய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும்
கதிர்கள் சுமந்து தாருங்கள்

முன்னோர் சொன்ன முதுமொழி எல்லாம்
முதுகில் சுமந்தால் போதாது
சொன்னோர் கருத்தை வாழ்க்கைப் படுத்த
துணிந்தால் துன்பம் வாராது.

- வைரமுத்து

★ ★ ★

## யசோதர காவியம்

ஏப்ரல் 2024

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

★ ★ ★

www.surabooks.com

இயல் 1

அமுதென்று பேர்

# தமிழ்விடு தூது

கவிதைப்பேழை

## கரு

* ✳ தமிழின் பெருமையைப் பாடுவதற்கு கவிஞர்கள் கையாளும் கருவி கவிதை.
* ✳ கிளி, அன்னம், விறலி, பணம், தந்தி ஆகிய வழிகளில் தூது அனுப்பியதை நாம் அறிவோம். தமிழையே தூதுப் பொருளாக கொண்டது தமிழ்விடுதூது.
* ✳ தமிழின் இனிமை, இலக்கிய வளம், பாச்சிறப்பு, சுவை, அழகு, திறம், தகுதி ஆகியன பற்றி இந்தப் பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது.

## நூற் குறிப்பு

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது, **'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்'** என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தி அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தில் ஒன்றை தூது விடுவதாகக் **'கலிவெண்பா'** வால் இயற்றப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் **268** கண்ணிகளைக் கொண்டுள்ளது. தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்நூலை **1930இல் உ.வே.சா.** முதன் முதலில் பதிப்பித்தார்.

இதன் **ஆசிரியர் யார்** என அறிந்துகொள்ள இயலவில்லை.

## பாடல்

### சீர்பெற்ற செல்வம்

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே **(கண்ணிகள் 69-72)**

## சொல்லும் பொருளும்

* ✳ குறம், பள்ளு – சிற்றிலக்கிய வகைகள்
* ✳ மூன்றினம் – துறை, தாழிசை, விருத்தம்
* ✳ திறமெல்லாம் – சிறப்பெல்லாம்
* ✳ சிந்தாமணி – சிதறாத மணி (சீவகசிந்தாமணி) என்னும் இருபொருளையும் குறிக்கும்.
* ✳ சிந்து – ஒரு வகை இசைப்பாடல்



www.surabooks.com

## பொருளுரை

இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான முத்தி ஆகிய விடுதலை தரும் கனியே! **இயல், இசை, நாடகம்** என, மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. அதைக் கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். பிறர் படிக்கும் வகையில் நீ அவற்றைக் கொண்டிருக்கிறாய். அதனால் உனக்குத் **தாழிசை, துறை, விருத்தம்** என்னும் மூவகைப் பாவினங்களிலும் உறவு ஏதேனும் உண்டோ?

பாவின் திறம் அனைத்தும் கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே **'சிந்தா'** (கெடாத) **மணியாய்** இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒருவகையான) 'சிந்து' என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு கூறிய நா இற்று விழும் அன்றோ?

## இலக்கணக்குறிப்பு

1. முத்திக்கனி – உருவகம்
2. தெள்ளமுது – பண்புத்தொகை
3. சிந்தாமணி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

**கொள்வார்** – கொள் + வ் + ஆர்
கொள் – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

## கற்பவை கற்றபின்

1. **'நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி' என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்றை எழுதுக.**

உலக மொழிகளில் சிறந்த மொழி தமிழ் மொழியேயாகும். எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தமிழ்மொழி. தமிழ் எழுத்துகளின் ஒலிகள் மிக இயற்கையாக எளிமையாக அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி ஒலிகளை ஒலிக்க இயலும். மென்மையான ஓசையுடைய மொழி தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பேசப்பட்டு பேச்சுவழக்கிலும் எழுத்துவழக்கிலும் இன்றளவும் அழியாமல் பேசப்பட்டு வருகிறது.

மக்கள் தங்களுடைய உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களையும் கருத்துகளையும் தாங்கள் எண்ணியவாறே எடுத்துரைக்கும் வல்லமைப் பெற்ற, சொல்வளம் பெற்ற மொழி நம் தமிழ்மொழி. மற்றவர்கள் விரும்பிக் கேட்குமாறு அமைந்த சொல்லின்பமும் உடைய மொழி நம் மொழி. அதனால்தான், தமிழ்மொழியில் காலந்தோறும் மாற்றிக்கொண்டு பல வடிவங்களில் இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

தம் கருத்துகளைச் சிறந்த சொற்களால் திறம் பட உரைப்பதற்கு ஏதுவாக இனிய பல சொற்களைக் கொண்ட மொழியாக விளங்குகிறது. "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்பது பாரதியாரின் கூற்று. உள்ளம் தூய்மைபெறின் சொல்லும் தூய்மை பெறும், செயலும் தூய்மை பெறும். அவ்வாறு

உள்ளம் தூய்மை பெறுவதற்கான எல்லா நெறிகளும் தமிழ்மொழியில் இருப்பது மொழிக்கும் நமக்கும் பெருமை.

தமிழ்மொழியில் ஒரு பொருளைக் குறிப்பதற்குப் பல சொற்களும் பல பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல்லும் உள்ளன. இளமைப் பெயர்கள், தொகுப்புப் பெயர்கள், வினைப் பெயர்கள் எனப் பல உள்ளன. ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் தாவர இலைப் பெயர்களும், இலையின் வளர்ச்சிக்கேற்ற பெயர்களும், பூ தோன்றுவது முதல் உதிர்வது வரை உள்ள நிலைகளுக்கும் சொற்கள் உண்டு. இதனால் எவ்விதக்குழப்பமின்றி நாம் பேசவியலும்.

திணை பாகுபாடு, ஒருமை, பன்மை போன்ற இலக்கண அமைப்பு முறை நம் கருத்துகளைத் தெளிவாக்கும். நாகரிகம் வளர வளர, மக்களிடையே புதுப்புதுப் பொருள்கள் தோன்றின. அறிவியல் வளர்ச்சியினாலும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் புதிய சொற்கள் தோன்றின. நாம் அவற்றிற்கெல்லாம் கலைச் சொற்களைக் கண்டறிந்து விட்டோம். இதனால் நம் எண்ணங்களைத் தமிழில் எளிதாக எடுத்துரைக்க முடிகின்றது.

**2. படித்துத் திரட்டுக.**

“காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க.”

– கவியோகி சுத்தானந்த பாரதியார்

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.**

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்கள் :**

குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், சூளாமணி, திருக்குறள்.

## திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

**2. தமிழ்விடு தூது .............. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.**

காலாண்டுத் தேர்வு 2019, ஏப்ரல் 2023 & 2024

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

விடை: **இ) சிற்றிலக்கியம்**

**5. சிந்தா மணி என்பதன் இலக்கணக்குறிப்பு -**

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

விடை: **ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

### குறுவினா

**3. கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

ஏப்ரல் 2023, காலாண்டுத் தேர்வு 2023

இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் **கண்ணி** என்று பெயர். அதேபோல் தமிழில் **இரண்டிரண்டு அடிகள்** கொண்ட **எதுகையால்** தொடுக்கப்படும் செய்யுள் வகை **கண்ணி** ஆகும்.

## சிறுவினா

1. **தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.**

**தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகள் :**

(i) இனிக்கும் தெளிந்த அமுதமாய், அந்த அமிழ்தினும் மேலான முக்தி ஆகிய விடுதலை தரும் கனியே!

(ii) **இயல், இசை, நாடகம்** என மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே!

(iii) அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. அதைக் கேட்பாயாக!

(iv) தமிழே! உன்னை அறிந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்பு கொள்கின்றனர். பிறர் படிக்கும் வகையில் நீ அவற்றைக் கொண்டிருக்கிறாய்! அப்படிப்பட்ட உன்னிடம் **தாழிசை, துறை, விருத்தம்** என்னும் மூவகைப் பாவினங்களும் இருக்க வேண்டும்.

(v) பாவின் திறம் அனைத்தும் கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே **'சிந்தா'** (கெடாத) **மணியாய்** இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒருவகையான) 'சிந்து' என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு) கூறிய நா இற்று விழும் அன்றோ?

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **கண்ணியில் வரும் அடிகள்** (காலாண்டுத் தேர்வு 2019)
   அ) **இரண்டடி** ஆ) மூவடி இ) நான்கடி ஈ) ஐந்தடி

2. **தமிழ்விடு தூதில் வரும் மூன்றினம் எதனைக் குறிக்கிறது?**
   அ) **துறை, தாழிசை, விருத்தம்** ஆ) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா
   இ) வெண்பா, துறை, கலிப்பா ஈ) தாழிசை, ஆசிரியப்பா, விருத்தம்

3. **தமிழ்விடு தூது நூலை பதிப்பித்தவர் ..............**
   அ) திரு.வி.க ஆ) சுரதா இ) பாரதிதாசன் ஈ) **உ.வே.சா**

4. **தமிழ்விடு தூது நூலில் அமைந்துள்ள கண்ணிகள் ..............**
   அ) 269 ஆ) 267 இ) **268** ஈ) 368

5. **தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று தூது இதன் வேறு பெயர்**
   அ) **சந்து இலக்கியம்** ஆ) நாடோடி இலக்கியம்
   இ) பௌத்த இலக்கியம் ஈ) இவை ஏதுமில்லை

6. **பொருந்தாததை தேர்க.**
   அ) தாழிசை ஆ) **அழகு** இ) துறை ஈ) விருத்தம்

7. **தமிழ்விடுதூது நூல் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு................**
   அ) 1928 ஆ) 1932 இ) **1930** ஈ) 1935

### குறுவினா

1. **பாவின் திறம் அனைத்தும் கைவரப் பெற்றது இக்கூற்றை ஆய்க.**

பாவின் திறம் அனைத்தும் கைவரப் பெற்று என்றுமே சிந்தாமணியாய் இருக்கும் உன்னை 'சிந்து' என்று அழைப்பேன் என்று தமிழ் விடு துதில் தமிழின் சிறப்பினை உணர்த்துகின்றன மேற்கண்ட வரிகள்.



www.surabooks.com

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே.

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**

அ) தமிழ்விடு தூது ஆ) நாரைவிடு தூது
இ) தமிழோவியம் ஈ) முத்தொள்ளாயிரம்

விடை: **அ) தமிழ்விடு தூது**

2. **குறம், பள்ளு என்பவை யாவை?**

அ) பதினெண் கீழ்க்கணக்கு ஆ) பதினெண் மேல்கணக்கு
இ) சிற்றிலக்கியங்கள் ஈ) ஐம்பெருங்காப்பியங்கள்

விடை: **இ) சிற்றிலக்கியங்கள்**

3. **சிந்து என்பது என்ன?**

அ) நாட்டுப்புறப்பாடல் ஆ) இசைப்பாடல்
இ) பக்திப்பாடல் ஈ) கதைப்பாடல்

விடை: **ஆ) இசைப்பாடல்**

4. **சிந்தாமணி என்பதன் பொருள் யாது?**

அ) சீவகசிந்தாமணி ஆ) சிகப்பான மணி
இ) சிதறாத மணி ஈ) அ மற்றும் இ

விடை: **ஈ) அ மற்றும் இ**

☆☆☆

# இயல் 1 அமுதென்று பேர்

## திராவிட மொழிக்குடும்பம்

உரைநடை

**கரு**

* தமக்கு தோன்றிய கருத்தை பிறருக்கு உணர்த்தவே மனிதர் கண்டுபிடித்த கருவி மொழி.
* தமிழ் திராவிட மொழிகளின் மூத்த மொழியாகும்.
* திராவிட மொழிகளின் ஆய்விற்கு பங்களிப்பு செய்தவர்கள் பலர் உள்ளனர்.
* தமிழ் மொழிக்கு சில சிறப்புக் கூறுகளும் தனித்தன்மைகளும் உள்ளன.
* தமிழ்மொழி அதன் தன்மை மாறாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது.
* தமிழ்மொழியின் சிறப்பை பிறமொழிகளுடன் ஒப்பிட்டு உணர்த்துகிறது இவ்வுரைப்பகுதி.

www.surabooks.com

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் உங்கள் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளனவா? கண்டறிக.**

(i) என்னுடைய பெயர் கலைச் செல்வி
என் பெயரின் பொருள் 'கலையின் குழந்தை'

(ii) என் நண்பர் பெயர் மாரிகா
இப்பெயரின் பொருள் 'மழையின் சோலை'

(iii) மற்றொரு தோழியின் பெயர் கமழினி.
இப்பெயரின் பொருள் 'மணம் நிறைந்தவள்.'

**2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

(எ.கா.) செய்–செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்
வா .............

**மாணவன் 1** : நம் தமிழ்மொழியைப் பிறமொழிப் பேசுபவர்களாலும் எளிதில் படிக்கவும் பேசவும் இயலும் என்பதை நாம் அனைவரும் அறிந்ததே. அதற்கு நம் தமிழ்மொழியின் இலக்கண வளம் தான் காரணம்.

**மாணவன் 2** : எப்படிச் சொல்கிறாய்? கொஞ்சம் விளக்கமாகக் கூறு.

**மாணவன் 1** : கூறுகிறேன் கேள். எடுத்துக்காட்டாக அடிச்சொல் என்றும் வேர்ச்சொல் என்றும் கூறப்படும் சொற்கள் சுட்டுப் பெயர்களுடனும் மூவிடப் பெயர்களுடனும் சேரும்போது பல மாற்றங்களைப் பெறும்.

**மாணவன் 2** : அடிச்சொல் என்கிறாயே அதன் செயல் யாது?

**மாணவன் 1** : பகுப்பாய்வு முறையில் பிரிக்க முடியாத நிலையில் உள்ள சொல் வேர்ச்சொல் எனப்படும். இவை விகுதிகளைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும். வேர்ச்சொல்லானது பகுக்க முடியாத வினைச் சொல் ஆகும். இது கட்டளைப் பொருளில் நிற்கும். இது முக்காலங்களுடனும் மூவிடப் பெயர்களுடன் சேரும்போது சில மாற்றங்களைப் பெறும். உதாரணத்திற்குச் 'செய்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இச்சொல் முக்காலங்களில் கூறும்போது ஏற்படும் மாற்றம்.

| |
|---|
| செய் – வேர்ச்சொல் |
| செய்தாள் – இறந்த காலம், செய்கிறாள் – நிகழ்காலம்,<br>செய்வாள் – எதிர்காலம். |

முக்காலத்தையும் மூவிடத்தையும் குறிப்பிடுவன 'வா' வேர்ச்சொல்

| |
|---|
| வந்தான் – இறந்த காலம், வருகிறான் – நிகழ்காலம்,<br>வருவான் – எதிர்காலம் |

**மாணவன் 2** : நீ கூறிய இச்சொற்கள் மூவிடங்களையும் சுட்டுகிறதே?

**மாணவன் 1** : ஆமாம். மூவிடப் பெயரையும் சுட்டும். வந்தான், வருகிறான், வருவான், என்பவை அவன் வந்தான், அவன் வருகிறான், அவன் வருவான் எனக் குறிப்பிடப்படும்போது அவன் படர்க்கைப் பெயரில் சுட்டப்படுகிறது.

**மாணவன் 2** : இதே போல் தன்மை முன்னிலை வருமாறு அமைவதைக் கூறு.


www.surabooks.com

**மாணவன் 1** : சொல்கிறேன் கேள். **நான் வந்தேன், நான் வருகிறேன், நான் வருவேன்** – இவை தன்மை இடத்தைக் குறிக்கின்றது. முக்காலமும் அமையப்பெற்றுள்ளது. **நீ வந்தாய், நீ வருகின்றாய், நீ வருவாய்** - இவை முன்னிலை இடத்தையும் முக்காலமும் அமையப்பெற்றுள்ளது.

**மாணவன் 2** : அடிச்சொல் முக்காலம், மூவிடம் இவற்றை மட்டும்தான் ஏற்குமா?

**மாணவன் 1** : அடிச்சொல் முக்காலம், மூவிடம் இவற்றோடு (ஒருமை, பன்மை 'எண்'ணையும் ஏற்கும்)

**வந்தோம், வருகின்றோம், வருவோம்** - தன்மை / மூவிடம் / உயர்திணை

**வந்தீர்கள், வருகின்றீர்கள், வருவீர்கள்** - முன்னிலை / மூவிடம் / உயர்திணை

**வந்தனர், வருகின்றனர், வருவார்கள்** - படர்கை / மூவிடம் / உயர்திணை

**மாணவன் 2** : 'வா' என்ற வேர்ச்சொல் அஃறிணையில் வரும்போது ஏற்படும் மாற்றத்தை நான் கூறுகிறேன். ஒருமையில் 'அது வந்தது' என்றும், பன்மையில் 'அவை வந்தன' என்றும் மாற்றம் பெறுகிறது. சரியா?

**மாணவன் 1** : சரியாகச் சொன்னாய். இவ்வாறு நம் தமிழ்மொழியில் உள்ள வேர்ச்சொற்கள் வடிவ மாற்றம் பெறுகின்றன.

## திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

**1. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிடமொழி எது?**

அ) தமிழ் ஆ) தெலுங்கு

இ) மலையாளம் ஈ) கன்னடம் **விடை: இ) மலையாளம்**

### குறுவினா

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?** கா.தேர்வு 2019, ஏப்ரல் 2024

நாங்கள் பேசும் மொழி **தமிழ்.** அம்மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் **திராவிட மொழிக் குடும்பத்தைச்** சேர்ந்தது.

**5. தென்திராவிட மொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.**

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு.

### சிறுவினா

**2. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.** காலாண்டு 2019, 2023, அரையாண்டுத் தேர்வு 2019

மொழிகள் பரவிய நில அடிப்படையில் திராவிட மொழிகள் மூன்று வகைப்படும். அவை, தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள்.

**தமிழ் :**

(i) திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லில் இருந்து உருவானதே ஆகும்.

(ii) தமிழ் தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடையது.

(iii) திராவிட மொழிகளுள் பிற மொழித்தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படுகிறது.

(iv) ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் பெற்ற மொழி.



www.surabooks.com

**3. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**
ஏப்ரல் 2023

திராவிட மொழிகளுக்கெனச் சில பொதுப் பண்புக்கூறுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்றுபோலவே அமைந்துள்ளதைப் பார்க்கலாம்.

(i) மூன்று – தமிழ் (ii) மூணு – மலையாளம்
(iii) மூடு – தெலுங்கு (iv) மூரு – கன்னடம்
(v) மூஜி – துளு

## நெடுவினா

**1. காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.** ※

**முன்னுரை :**

காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி இங்கு காண்போம்.

**தமிழின் தனித்தன்மைகள் :**

(i) தொன்மையும் தனித்தன்மை வாய்ந்த இலக்கண இலக்கியவளமும் உடையது தமிழ் மொழியாகும்.

(ii) இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற உலக நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்.

(iii) திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

(iv) தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

(v) ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும், சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

(vi) இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலனவை தமிழிலேயே அமைந்துள்ளன.

(vii) தமிழின் பல வேர்ச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுபெயர்களும் மூவிடப்பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

**முடிவுரை :**

தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது. எனவே, பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாகத் தமிழ்மொழி அமைகிறது. தமிழ்மொழி மூலத் திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.

## கூடுதல் வினாக்கள்

**1. இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என்றவர் ............ .** காலாண்டுத் தேர்வு 2019

அ) மாக்ஸ்முல்லர் ஆ) கால்டுவெல்
**இ) ச.அகத்தியலிங்கம்** ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்

2. திராவிட மொழிகள் நான்கினையும் ஒப்புமைப்படுத்தி முதன் முதலில் கருத்து தெரிவித்தவர்
அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) மாக்ஸ் முல்லர்
இ) ஹோக்கன் **ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்**

3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் ............. .
**அ) கால்டுவெல்** ஆ) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்
இ) கமில்சுவலபில் ஈ) குமரிலபட்டர்

4. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் ............. .
அ) ஹீராஸ் பாதிரியார் **ஆ) குமரிலபட்டர்**
இ) பிரான்சிஸ் எல்லிஸ் ஈ) கால்டுவெல்

5. ஒப்பியல் ஆய்வுக்கு பெருந்துணையாக அமைந்துள்ள மொழி ............. .
அ) சமஸ்கிருதம் ஆ) ஆங்கிலம் **இ) தமிழ்** ஈ) மலையாளம்

6. தொன்மையும் இலக்கண வளமும் உடையது ............. மொழி.
**அ) தமிழ்** ஆ) மலையாளம் இ) துளு ஈ) சமஸ்கிருதம்

7. வட திராவிட மொழிகள் ..............
அ) தமிழ், கன்னடம் **ஆ) மால்தோ, தெலுங்கு**
இ) மால்தோ, பிராகுயி ஈ) துளு, இருளா

8. பொருத்துக.

| அடிச்சொல் | | திராவிட மொழிகள் | |
|---|---|---|---|
| அ) | கண்ணு | 1. | தெலுங்கு |
| ஆ) | கன்னு | 2. | தோடா |
| இ) | கெண் | 3. | மலையாளம் |
| ஈ) | கொண் | 4. | பர்ஜி |

அ) 3, 2, 1, 4 ஆ) 4, 3, 1, 2 **இ) 3, 1, 4, 2** ஈ) 4, 1, 2, 3

9. பொருத்துக.

| இலக்கியம் | | மொழி | |
|---|---|---|---|
| அ) | ராமசரிதம் | 1. | கன்னடம் |
| ஆ) | பாரதம் | 2. | தமிழ் |
| இ) | கவிராஜமார்க்கம் | 3. | மலையாளம் |
| ஈ) | சங்க இலக்கியம் | 4. | தெலுங்கு |

அ) 4, 3, 1, 2 **ஆ) 3, 4, 1, 2** இ) 4, 1, 2, 3 ஈ) 3, 1, 4, 2

10. இந்தியாவில் பேசப்படும் மொழிகள் எத்தனை குடும்பங்களாக பிரிக்கப்படுகிறது?
அ) 5 ஆ) 6 இ) 3 **ஈ) 4**

11. நடுத்திராவிட மொழிகளில் பொருந்தாதது...................
அ) கோண்டா ஆ) மண்டா **இ) கோத்தா** ஈ) கோண்டி

12. **பொருத்துக.**
அ) பொ. ஆ. மு. 5 – 1. பாரதம்
ஆ) பொ. ஆ. மு. 9 – 2. சங்க இலக்கியம்
இ) பொ. ஆ. மு. 11 – 3. ராமசரிதம்
ஈ) பொ. ஆ. மு. 12 – 4. கவிராஜமார்க்கம்
அ) 2, 3, 2, 1 ஆ) 2, 4, 1, 3 இ) 3, 4, 1, 2 ஈ) 3, 1, 2, 4

13. **பொ. ஆ. 11-ம் நூற்றாண்டில் உருவான தெலுங்கு மொழி இலக்கண நூல்................**
அ) லீலா திலகம் ஆ) கவிராஜ மார்க்கம்
இ) ஆந்திரா பாஷா பூஷணம் ஈ) ராம சரிதம்

14. **சரியான தொடரைத் தேர்க.**
அ) மரம், மானு, மர, மரம் ஆ) ஒன்று, ஒண்ணு, ஒகடி, ஒந்து
இ) ஐந்து, ஐனு, அஞ்சு, ஐது ஈ) நூறு, நூது, நூரு,நீவு

15. **பொருந்தாத திராவிடமொழிகளின் அடிச்சொல் எது?**
அ) கன்னு ஆ) கண்ணு இ) ஒண்ணு ஈ) கண்

16. **கூற்று : திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்றது தமிழ்.**
**காரணம் : தமிழ் பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.**
அ) கூற்றும் காரணமும் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்றும் காரணமும் சரி ஈ) கூற்று சரி காரணம் தவறு

17. **கீழ்கண்டவற்றின் எண்ணுப்பெயர்களுள் பொருந்தாததை தேர்க.**
அ) தமிழ் – மூன்று ஆ) தெலுங்கு – மூணு
இ) கன்னடம் – மூரு ஈ) துளு – மூஜி

18. **வாய், மூக்கு, கண் – இவற்றின் பால்பாகுபாடு வரிசை.................**
அ) பெண்பால், பொதுப்பால், ஆண்பால்
ஆ) ஆண்பால், பெண்பால், பொதுப்பால்
இ) பெண்பால், ஆண்பால், பொதுப்பால்
ஈ) பொதுப்பால், ஆண்பால், பெண்பால்

**குறுவினா**

1. **நான்கு மொழிக் குடும்பங்கள் யாவை?** காலாண்டுத் தேர்வு 2019
(i) இந்தோ – ஆசிய மொழிகள்
(ii) திராவிட மொழிகள்
(iii) ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
(iv) சீன – திபெத்திய மொழிகள்.

2. **இந்தியா மொழிகளின் காட்சிச்சாலை என அழைக்கப்படுவதன் காரணம் யாது?** ※
1000க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. நான்கு வகை மொழிக் குடும்பங்களாக இவற்றைப் பிரிக்கின்றனர். மேலும், இங்குப் பல கிளைமொழிகள் பேசப்படுவதால் இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என ச. அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.



www.surabooks.com

**3. திராவிடா என்ற சொல் எச்சொல்லிலிருந்து பிறந்தது?**

தமிழ் என்ற சொல்லில் இருந்து தான் திராவிடா என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

**4. தென்னிந்திய மொழிகள் எவை என பிரான்சிஸ் எல்லிஸ் கூறுகிறார்?**

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தைப் பிரான்சிஸ் எல்லிஸ் என்பவர் முதன் முதலில் தெரிவித்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனப்பெயரிட்டார்.

**5. கால்டுவெல்லுக்குப் பின்னர் திராவிட மொழிகளை ஆய்வு செய்தோர் யாவர்?**

கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில் ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், வி.எச்.கிருஷ்ணமூர்த்தி.

## சிறுவினா

**1. திராவிட மொழிகளின் பால்பாகுபாடு குறித்து எழுதுக.**

**பால்பாகுபாடு :**

(i) திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

(ii) உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும்கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன. இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும், கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன.

(iii) ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன. வாய் – ஆண்பால், மூக்கு – பெண்பால், கண் – பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.

(iv) திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது.

(v) அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை.

(vi) தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.
(எ.கா. கடுவன் –மந்தி; களிறு – பிடி).

## நெடுவினா

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.** ※ காலாண்டுத் தேர்வு 2019, 2023

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| திராவிட மொழி |
| திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் |
| பொதுப்பண்புக் கூறுகள் |
| முடிவுரை |

**முன்னுரை :**

திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்தமொழியாகத் திகழ்கின்றது தமிழ். பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது தமிழ்மொழி என்பதைச் சான்றுகளுடன் காணலாம்.

**திராவிட மொழி :**

இலக்கண இலக்கியவளம் பெற்ற தொன்மையான மொழி தமிழ். பிற திராவிட மொழிகளைவிட தனக்கென தனித்த இலக்கண இலக்கிய வளம் பெற்று விளங்கும் மொழி தமிழ்.

தமிழ் – தமிழா – தமிலா – டிரமிலா – ட்ரமிலா – த்ராவிடா – திராவிடா என்ற சொல் பிறந்ததாக ஹீராஸ்பாதிரியார் விளக்கி கூறுகிறார்.

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் :**

பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து 'தென்னிந்திய மொழிகள்' என அழைத்தார்.

1886ல் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் தன் நூலில் திராவிட மொழிகள் ஆரியமொழி குடும்பத்திலிருந்து வேறுபட்டவை என்று கூறினார்.

**பொதுப்பண்புக் கூறுகள் :**

பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளை எடுத்துரைத்தார். திராவிட மொழிகளுக்குச் சில பொதுப்பண்புக் கூறுகள் காணப்படுகின்றன.

(i) **அடிச்சொல் :** சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால் அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருக்கிறது.

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

(ii) **எண்ணுப் பெயர்கள்:**

மூன்று – தமிழ்    மூணு – மலையாளம்    மூடு – தெலுங்கு

மூரு – கன்னடம்    மூஜி – துளு

(iii) **குறில், நெடில் வேறுபாடு :**

குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

அடி – குறில்    ஆடி – நெடில்

இடு – குறில்    ஈடு – நெடில்

(iv) **பால் பாகுபாடு:**

திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு, உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை,


www.surabooks.com

தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.

**(எ.கா.)**

| ஆண் | பெண் |
|---|---|
| கடுவன் | மந்தி |
| களிறு | பிடி |

**(v) வினைச் சொற்கள்:**

திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

**(எ.கா)** வந்தான் (உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை)

**முடிவுரை :**

தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன. தமிழ்மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகளைப் பெற்று, பிற மொழிகளுக்கு தாய்மொழியாகவும் விளங்குகிறது. எனவே, திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்கு தமிழ் பெருந்துணையாக இருக்கிறது.

## விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

1. **இந்தியாவில் பேசப்படும் மொழிகளை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரித்துள்ளனர்.**
   இந்தியாவில் பேசப்படும் மொழிகளை எத்தனை மொழிக்குடும்பங்களாகப் பிரித்துள்ளனர்?

2. **இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.**
   இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர் யார்?

3. **திராவிட மொழிக்குடும்பத்தை மொழிகள் பரவிய நில அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தியுள்ளனர்.**
   திராவிட மொழிக்குடும்பத்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர்?

4. **தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.**
   தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவி யாது? (அல்லது) மொழி எதற்குக் கருவியானது?

## நிறுத்தக்குறியிடுக.

1. **உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு தொடர்பு அமைப்பு உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன**
   உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

www.surabooks.com



**2. தமிழ் வடமொழியின் மகளன்று அது தனிக்குடும்பத்திற்கு உரிய மொழி சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்**

தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக்குடும்பத்திற்கு உரிய மொழி; சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி; தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்.

**சந்திப்பிழையைத் திருத்தி எழுதுக.**

**1. இந்தியாவில் பேசப்படும் மொழிகளை நான்கு மொழி குடும்பங்களாக பிரிக்கின்றனர்.**

இந்தியாவில் பேசப்படும் மொழிகளை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்.

**2. சொற்களின் இன்றியமையா பகுதி வேர்சொல் அடிசொல் எனப்படும்.**

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல் அடிச்சொல் எனப்படும்.

**3. தமிழ்மொழி தனக்கென தனித்த இலக்கணவளத்தை பெற்று தனித்தியங்கும் மொழியாகும்.**

தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.

**4. தமிழ்மொழி தனிதன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னை புதுப்பித்து கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்குகிறது.**

தமிழ்மொழி தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்குகிறது.

**5. இந்திய நாடு மொழிகளின் காட்சி சாலையாக திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.**

இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

**கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1000க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவை, இந்தோ – ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன திபெத்திய மொழிகள் என அழைக்கப்படுகின்றன. பல கிளை மொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு 'மொழிகளின் காட்சிச் சாலையாகத்' திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

**வினாக்கள் :**

**1. இந்தியாவில் பேசப்படும் நான்கு வகையான மொழிகள் யாவை?**

இந்தோ – ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன–திபெத்திய மொழிகள்.

**2. இந்தியாவில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?**

இந்தியாவில் 1000க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன.

**3. இந்திய நாட்டை 'மொழிகளின் காட்சிச்சாலை' என்று குறிப்பிட்டவர் யார்?**

ச. அகத்தியலிங்கம்.

☆☆☆

# இயல் 1 அமுதென்று பேர்

## தமிழோவியம்

- ஈரோடு தமிழன்பன்

கவிதைப்பேழை

### கரு

* தோற்றத்தில் தொன்மையும் தொழில் நுட்பத்திற்கு ஏற்ற புதுமையும், அறியும் இலக்கணம் தந்ததும், அரிய இலக்கணத்தை கொண்டதுமாக விளங்குகிறது தமிழ்.
* காலம் பிறக்கும் முன் பிறந்ததும், எக்காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! உன்னை தமிழோவியமாக கண்டு மகிழ்கிறோம்.

### ஆசிரியர் குறிப்பு

**ஆசிரியர்** : ஈரோடு தமிழன்பன்

**பெற்றோர்** : செ.இரா. நடராசன் - வள்ளியம்மாள்.

**பிறப்பு** : செப்டம்பர் 28 - 1933

**பிறந்த ஊர்** : ஈரோடு மாவட்டம் - சென்னிமலை.

**விருதுகள்** : 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதெமி விருது-2004, **'தமிழன்பன் கவிதைகள்'** - தமிழக அரசின் பரிசு நூல்.

**சிறப்பு** : தமிழக அரசின் கலைமாமணி விருது.

### நூற் குறிப்பு

ஈரோடு தமிழன்பன் எழுதிய 'தமிழோவியம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை இது.

### பாடல்

காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!

அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் - உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்! - காலம் பிறக்கும் முன்...

ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் - நீதி
ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்
மானிட மேன்மையைச் சாதித்திடக் - குறள்
மட்டுமே போதுமே ஓதி, நட... - காலம் பிறக்கும் முன்...

எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே... - காலம் பிறக்கும் முன்...

விரலை மடக்கியவன் இசையில்லை – எழில்
வீணையில் என்று சொல்வதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்!

– ஈரோடு தமிழன்பன்

## சொல்லும் பொருளும்

* அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அகப்பொருள், புறப்பொருள் இலக்கியங்கள்
* அமைந்ததைச் சொல்லும் – நடந்ததைச் சொல்லும்
* இலக்கணங்கள் – இலக்கண நூல்கள்
* நிகரிலா – ஒப்பில்லா
* காப்பிய பூவனங்கள் – பூக்காடுகளாய் திகழும் தொடர்நிலைச் செய்யுள் (காப்பியங்கள்)
* ஏனிவ் இருட்டென – ஏன் இந்த இருட்டென.
* நீதி ஏந்திய தீபமாய் – உண்மை தாங்கிய ஒளியாய் (நியாயம்)
* மானிட மேன்மையை – மனித உயர்வை
* சாதித்திட – சாதித்துக்காட்ட
* ஓதி நட – படித்து நட
* சித்தர் மரபில் – சித்தர்களின் வழியில்
* தீதறுக்கும் – தீமைகளை நீக்கும்
* புதுச்சிந்தனை வீச்சுகள் – புதிய சிந்தனை தாக்கங்கள்
* புதுக் கோலம் – புதிய வடிவம்

## விரிவான விளக்கம்

காலம் பிறப்பதற்கு முன் பிறந்த தமிழே! எக்காலமும் நிலையாய் நிலைத்திருக்கும் தமிழே! அகப்பொருளையும், புறப்பொருளையும் இலக்கிய வடிவில் தந்த இன்பத் தமிழே! ஒப்பில்லா காப்பியங்களைக் கொண்டு, உன் இதயம் நடத்தட்டும் ஊர்வலங்கள். மனித மனங்களின் 'அறியாமை' எனும் இருட்டினை அகற்ற, நீதி நெறிகளை ஏந்தி தீபமாய் விளங்குகிறது திருக்குறள். மனித குலம் மேன்மை அடைய வள்ளுவன் காட்டிய குறள் வழி படித்தும் கேட்டும் நடந்துக்கொள். எத்தனை சமயங்கள் இருந்தாலும், அத்துணையும் தாயென வளர்த்தது நம் தமிழே! சித்தர் வழியிலே தீமைகளை அறுத்து புதிய சிந்தனைகளை பாய்ச்சும் மொழி தமிழே! விரலை மடக்கியதால் வீணையில் இசையில்லை என்று குறைகள் சொல்வதை விட்டு விட்டு, புதுவடிவம் கொடுத்து தமிழ் வளர்ப்பாய்.

## பொருள் தருக.

1. புனைந்து – புதிய வடிவம் கொடுத்து
2. நிகரிலா – ஒப்பில்லா
3. எழில் – அழகு
4. சித்தர் மரபு – சித்தர் வழி
5. நீதி – நியாயம்
6. சமயம் – மதம்

## பிரித்து எழுதுக

1. என்றென்றும் – என்று + என்றும்
2. தமிழோவியம் – தமிழ் + ஓவியம்
3. இசையில்லை – இசை + இல்லை
4. பூவனங்கள் – பூ + வனங்கள்

## இலக்கணக்குறிப்பு

1. எத்தனை எத்தனை, விட்டு விட்டு – அடுக்குத்தொடர்கள்
2. ஏந்தி – வினையெச்சம்
3. காலமும் – முற்றும்மை
4. நிகரிலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
5. புனைந்து – வினையெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

**வளர்ப்பாய்** – வளர் + ப் + ப் + ஆய்
- வளர் – பகுதி
- ப் – சந்தி
- ப் – எதிர்கால இடைநிலை
- ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**புனைந்து** – புனை + த் (ந்) + த் + உ
- புனை – பகுதி
- த் – சந்தி
- ந் – விகாரம்
- த் – இறந்தகால இடைநிலை
- உ – வினையெச்ச விகுதி

**பாய்ந்தன** – பாய் + த் (ந்) + த் + அன் + அ
- பாய் – பகுதி
- த் – சந்தி
- ந் – விகாரம்
- த் – இறந்தகால இடைநிலை
- அன் – சாரியை
- அ – பலவின் பால் வினை முற்று விகுதி

## கற்பவை கற்றபின்

1. **பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக.**

அவையோர்க்கு வணக்கம்!

நான், நம் மாணவப் பருவத்தினரின் எதிர்கால மாற்றங்களை உருவாக்கும் பழக்க வழக்கங்கள் பற்றித் தனித்தமிழில் பேசவிருக்கிறேன். நாம் அனைவருமே தற்கால நாகரிக ஈடுபாட்டால் பழம்பெரும் நற்பழக்கங்களைக் கைவிட்டு விட்டோம். நம் பெற்றோர்கள் நம்மை எதிர்கால உலகின் தூண்கள், சிற்பிகள் என எண்ணுகின்றனர். அவர்களின் நம்பிக்கையை நடைமுறைப்படுத்துவது நம் ஒவ்வொருவரின் கடமை. அதற்கு மாணவர்களாகிய நாம் வளமான, வலுவான, நலமான உள்ளம் மற்றும் உடலோடும் மகிழ்வோடும் மனம் இறுக்கம் இன்றியும் ஆற்றல் புரிபவர்களாய் நற்சாதனையாளர்களாய்த் திகழ வேண்டுமெனில் பின்வருவனவற்றை நாம் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும்.

தற்போதுள்ள கல்வி உலகம் வணிக உலகமாகவும், இயந்திர உலகமாகவும் உள்ளது. அதிகமான மதிப்பெண் பெற வேண்டும், வகுப்பில் முதல் மாணவனாக திகழ வேண்டும், வீட்டிலும் பள்ளியிலும் சரளமாக ஆங்கிலம் பேச வேண்டும், இதுவே பெற்றோர்களின் விருப்பமாக உள்ளது. நாம் நினைத்தால் மிக எளிதாகப் பெற்றோர்களின் இவ்விருப்பத்தை நிறைவேற்ற முடியும். நாம் மாற்றம் செய்ய வேண்டிய முதல் செயல் என்னவெனில் உணவு முறை.

இரவு முழுவதும் உண்ணாமல் இருப்பதால் காலையில் அதிக உணவு உண்ண வேண்டும். மதியம் கொஞ்சமாக உண்ண வேண்டும். இரவில் எளிதில் செரிக்கக்கூடிய மென்மையான உணவைக் குறைந்த அளவே உண்ண வேண்டும். இரண்டாவது நம் உடல் அமைப்பு. இதற்கும் நாம் உண்ணும் உணவே அடிப்படை. நம் உடல் அமைப்பு அதற்கேற்றாற்போல் நாம் சரியான முறையில் உணவு உண்டு உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

உணவு முறையும் உடற்பயிற்சியும் நல்ல கல்வியாளரை உருவாக்கும். இவற்றைச் சரிசெய்யாமல் படிப்பு படிப்பு என்றிருந்தால் நாம் கல்வியில் முழுமை பெற இயலாது. அது மன இறுக்கத்தை ஏற்படுத்தும் ஆர்வத்தோடு படித்தல், மனமகிழ்வோடு படித்தல் இடையிடையே ஓய்வு என்றிருத்தல் இவை நம்மை நன்மாணாக்கர்களாக மாற்றும். ஏட்டுக்கல்வி மட்டும் நம்மை நல்ல நிலைக்கு மாற்றாது. ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டல், கட்டுப்பாட்டுடன் இருத்தல், ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், மனிதநேயத்துடன் வளர்தல், தொண்டு எண்ணத்துடன் இருத்தல், இவற்றையெல்லாம் மேற்கொண்டால் நாம் அனைவருமே எதிர்கால இந்தியாவின் தூண்களாக இருப்போம்.

2. **கவிதையைத் தொடர்க.**

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி.

**விடை :**

எத்திசையும் புகழ்மணக்கும் மொழி
ஏற்றம்பல கண்ட மொழி
ஐந்திணைகளை வகுத்த மொழி
ஒருமித்து வளரும் மொழி
ஓங்கி உயரும் மொழி.

## திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

4. **"காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!" இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் யாவை?** ஏப்ரல் 2023

அ) முரண், எதுகை, அளபெடை
ஆ) இயைபு, அளபெடை, அந்தாதி
இ) மோனை, எதுகை, இயைபு
ஈ) மோனை, முரண், அந்தாதி

**விடை: இ) மோனை, எதுகை, இயைபு**

### குறுவினா

2. **தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.** காலாண்டுத் தேர்வு 2019

'காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!'

தமிழ் என்றும் நிலையானது நிலைத்த மொழி என்றும், பசுமை மாறா இளமை மாறா மொழி தமிழ் மொழியே என்று தமிழ்மொழியின் அழியாத்தன்மையைக் கூறுவதால் இவ்வடிகள் என்னை ஈர்த்தன.

4. **"அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்" - இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**

மக்களின் உள்ளத்தில் உள்ள அன்பையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறும் இலக்கணத்தை அகப்பொருள் என்றும், அகம் சாராத அறம், பொருள், வீடு, கல்வி, வீரம், கொடை, புகழ் முதலியவற்றைக் கூறும் இலக்கணத்தைப் புறப்பொருள் என்றும் அமைந்த இலக்கியம் இலக்கணமாய்த் திகழ்வதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

**சிறுவினா**

**4. ''புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்'' - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

(i) பாரதியார் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்" என்று பாடியுள்ளார். அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் பிறமொழி நூல்களை நம் தமிழ்மொழியில் மொழி பெயர்ப்பேன்.

(ii) இலக்கியங்களைக் காலக் கண்ணாடி என்றும் கூறுவர். அதனால் இன்றைய காலக் கட்டத்திற்கு நம் மாணவர்களுக்குத் தேவையானவற்றை எளிதில் பொருள் விளங்கக்கூடிய வகையில் நூல்கள் இயற்றுவேன்.

(iii) மாற்றம் ஒன்றே மாறாதது என்பதை உணர்ந்த நாம் தற்கால அறிவியல் வளர்ச்சிக்கேற்றபடி, அத்துறையில் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுக்குக் கலைச்சொற்களைக் கண்டறிவேன்.

(iv) அறிவியல் சார்ந்த நூல்களை எளிமையான தமிழில் உருவாக்குவேன். இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் இலக்கியங்களைப் படைப்பேன். இவ்வாறு தமிழைப் புதுக்கோலம் புனையச் செய்து அதனை வளர்ப்பேன்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக**

**1. 'தமிழோவியம்' எனும் கவிதை நூலை எழுதியவர் ............. .**

அ) தஞ்சை கவிராயர் **ஆ) ஈரோடு தமிழன்பன்**
இ) மாங்குடி மருதனார் ஈ) மதுரை காரியாசான்

**2. தமிழன்பனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ............. .**

அ) தமிழன்பன் கவிதைகள் ஆ) சென்ரியு
இ) தமிழோவியம் **ஈ) வணக்கம் வள்ளுவ**

**3. உலகத் தாய்மொழி நாள் ............. .**

அ) பிப்ரவரி 19 ஆ) பிப்ரவரி 20 **இ) பிப்ரவரி 21** ஈ) பிப்ரவரி 24

**4. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் ............. .**

அ) சிங்கப்பூர், மலேசியா ஆ) இலங்கை, கனடா
**இ) இலங்கை, சிங்கப்பூர்** ஈ) இந்தியா, இலங்கை

**5. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று கூறியவர் ............**

அ) பாரதிதாசன் ஆ) சுரதா **இ) பாரதியார்** ஈ) திரு.வி.க

**6. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று குறிப்பிடும் நூல்..................**

அ) திவாகர நிகண்டு ஆ) சூடாமணி நிகண்டு
**இ) பிங்கல நிகண்டு** ஈ) நீரரர் நிகண்டு

**7. தாயெனவே பிரிக்கும் முறை..................**

அ) தா + ய் + எனவே **ஆ) தாய் + எனவே**
இ) தாயெ + னவே ஈ) தா + எனவே

**8. ஏந்தி வளர்த்தது தாயெனவே - இவ்வரியில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கண குறிப்பு............**

அ) பெயரெச்சம் ஆ) வினைமுற்று
இ) வினைத்தொகை **ஈ) வினையெச்சம்**

www.surabooks.com

www.surabooks.com



9. நிகரிலாக் காப்பிய பூவனங்கள் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கண குறிப்பு.................
அ) பெயரெச்சம்　ஆ) வேற்றுமைத்தொகை
**இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**
ஈ) வினையெச்சம்

10. 'சித்தர் மரபிலே தீதறுக்கும்-புதுச்சிந்தனை வீச்சுகள் பாய்ந்தெனவே' இவ்வடிகள் இடம் பெற்ற நூல்.....
அ) தமிழ்விடுதூது　**ஆ) தமிழோவியம்**
இ) புறநானூறு　ஈ) சிறுபஞ்சமூலம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

எத்தனை எத்தனை சமயங்கள் – தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் – புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே...

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
அ) தமிழோவியம்　ஆ) தமிழ்விடுதூது
இ) தமிழ்ஒளி　ஈ) பிள்ளைத்தமிழ்
விடை: **அ) தமிழோவியம்**

2. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
அ) உ.வே.சா　ஆ) திரு.வி.க
இ) ஈரோடு தமிழன்பன்　ஈ) முடியரசன்
விடை: **இ) ஈரோடு தமிழன்பன்**

3. **எத்தனை எத்தனை – இலக்கணக்குறிப்பு தருக.**
அ) இரட்டைக்கிளவி　ஆ) அடுக்குத்தொடர்
இ) உம்மைத்தொகை　ஈ) வினைத்தொகை
விடை: **ஆ) அடுக்குத்தொடர்**

4. **தீதறுக்கும் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................**
அ) தீ + அறுக்கும்　ஆ) தீ + தறுக்கும்
இ) தீது + அறுக்கும்　ஈ) தீது + தறுக்கும்
விடை: **இ) தீது + அறுக்கும்**

☆☆☆

இயல் 1　அமுதென்று பேர்

# ஆறாம் திணை

– அ. முத்துலிங்கம்　விரிவானம்

**கரு**

* தாய்மண்ணிலிருந்து மனித உயிர்களை வெளியேற்றியும் கொன்று புதைக்கும் போக்கும் காலந்தோறும் நடந்துவரும் பெரிய அவலமாகும்.
* அவ்வாறு தாய்நாட்டிலிருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் எதிர்கொள்ளும் அவலங்களை ஆறாத வலியோடும், வடுவோடும் பதிவு செய்கிறது இந்த ஆறாம் திணை.

**ஆசிரியர் குறிப்பு**

பெயர் : அ. முத்துலிங்கம்
பிறப்பு : 19.01.1937 (84)

**ஊர்** : கொக்குவில் கிராமம், யாழ்ப்பாணம், இலங்கை.

**இருப்பிடம்** : பணி தொடர்பாகப் பல நாடுகளுக்குப் பயணித்திருக்கும் இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார்.

**சிறுகதைத் தொகுப்புகள்** : அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம்

புதினம் - 2, சிறுகதைத் தொகுப்பு - 15, கட்டுரைத் தொகுப்பு - 9, விருது - 12.

**பரிசுகள்** : 1996ஆம் ஆண்டு, வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். வடக்கு வீதி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999-இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசையும் பெற்றவர்.

## கற்பவை கற்றபின்

**1.** **நாளிதழ்களில் வெளியாகும் புலம்பெயர் மக்கள் பற்றிய செய்திகளைத் திரட்டிப் படத்தொகுப்பாக்குக.**




மாணவர்கள் செய்திதாள்களில் மேற்கண்டவாறு சேகரித்து படத்தொகுப்பு உருவாக்க வேண்டியவை.

## திறன் அறிவோம்

**நெடுவினா**

**2.** **புலம் பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என்பதை ஆறாம் திணை வாயிலாக விவரிக்க.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| இனக்கலவரம் |
| அகதிகள் வாழ்க்கை |
| அகதி வாழ்வின் வலி |
| முடிவுரை |



www.surabooks.com

### முன்னுரை

எழுத்தாளர் அ.முத்துலிங்கம் என்பவரால் எழுதப்பட்டது ஆறாம் திணை. இது புலம் பெயர் மக்கள், தங்களுடைய வாழ்வில் எதிர்கொள்ளும் அவலமான நிலையை எடுத்துக் கூறுகிறது. அந்த அவலநிலையை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

### இனக்கலவரம்

இலங்கையில் வாழ்ந்த தமிழ்க்குடும்பம் 1958 ஆம் ஆண்டு நிகழ்ந்த இனக்கலவரத்தில் சிக்கித் தப்பித்து அகதிகள் முகாமில் சேர்க்கப்பட்டது. அக்குடும்பம் இரவு நேரத்தில் என்ன வேண்டுமானாலும் ஆகலாம் என்ற நிலையில் இருந்தபோது வீட்டுக்குச் சொந்தக்காரரான பிரீஸ் அக்குடும்பத்தைக் காப்பாற்றியது. அங்கிருந்த மூன்று தமிழ்க் குடும்பங்களில் ஒரு குடும்பம் மட்டும்தான் தப்பியது.

### அகதிகள் வாழ்க்கை

கலவரத்தில் காப்பாற்றப்பட்டவர் அகதிகள் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். யாரோ அணிந்த கால்சட்டை கிடைத்தது. உணவுக்காகத் தட்டை ஏந்தி வரிசையில் நின்றபோது இனிமேல் இப்படி ஒரு கணம் தன் வாழ்க்கையில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என எண்ணினார்.

### அகதி வாழ்வின் வலி

முப்பது வயதுள்ள தமிழ் இளைஞர் இலங்கை, பாங்காக்கில் சிறைவாசம். ரஷ்யா பனிபுதைவில் உயிர் தப்பியவர். விசா கெடுவை மீறியதால் தண்டனைக்கு ஆளானார். கள்ள பாஸ்போர்ட் வைத்திருந்ததால் அமெரிக்காவில் தண்டனை. மூன்று வருடச் சிறைவாசத்திற்குப் பிறகு கனடாவிற்கு வந்தார். 17 கம்பெனிகளுக்குச் சென்று வேலை கிடைக்கவில்லை. 18 ஆவது இடத்தில் கனரக வாகனம் ஓட்டும் பணி கிடைத்தது. அவருடைய மகிழ்ச்சியும் வலியும் முகத்தில் தெரிகிறது. அகதிகளின் வாழ்க்கைக்கு இவருடைய வாழ்க்கை ஓர் சான்றாகிறது.

### முடிவுரை

புலம் பெயர்வது ஒன்றும் புதிதல்ல. சங்க இலக்கியங்கள் மக்கள் புலர் பெயர்ந்து வாழ்ந்ததை எடுத்தியம்புகின்றன.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக**

1. **எழுத்தாளர் அ. முத்துலிங்கம் பிறந்த நாடு................**
   அ) இந்தியா ஆ) சிங்கப்பூர் இ) கனடா **ஈ) இலங்கை**
2. **கீழ்க்கண்டவற்றுள் அ. முத்துலிங்கம் எழுதாத சிறுகதைத் தொகுப்பு எது?**
   அ) அக்கா ஆ) மகாராஜாவின் ரயில்வண்டி
   **இ) காகங்கள்** ஈ) திகடசக்கரம்
3. **1996ஆம் ஆண்டு தமிழக அரசின் விருதுபெற்ற அ. முத்துலிங்கம் அவரின் நூல் எது?**
   அ) வடக்குவீதி **ஆ) வம்சவிருத்தி**
   இ) திகடசக்கரம் ஈ) அக்கா
4. **அ. முத்துலிங்கம் இலங்கையில் இருந்த வாடகை வீட்டின் சொந்தக்காரர் ..............**
   **அ) பிரீஸ்** ஆ) ஜெயபாலன்
   இ) டேனியல் டிஃபோ ஈ) குரூஸ்

5. **இலங்கை கொழும்புவில் கலவரம் ஏற்பட்ட ஆண்டு ................**

அ) 1968 ஆ) 2012 **இ) 1958** ஈ) 1983

6. **'இந்த நாளை நன்றாக ஞாபகம் வை. இதுவே உன் வாழ்நாளில் ஆகக் கீழேயான தருணம். இனிமேல் இப்படி ஒரு கணம் உன் வாழ்க்கையில் வாராமல் பார்த்துக் கொள்' - என்று தனக்குத்தானே கூறிக் கொண்டவர்........**

அ) இந்திரன் ஆ) இரா. மீனாட்சி

இ) பிரபஞ்சன் **ஈ) அ. முத்துலிங்கம்**

7. **''வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி வாழ்வோர் போகிய பேர் ஊர்ப் பாழ்'' - என்ற பாடல்வரிகள் இடம் பெற்ற நூல்.............**

அ) கலித்தொகை ஆ) குறுந்தொகை

**இ) நற்றிணை** ஈ) புறநானூறு

8. **தமிழ் அகதிகள் கனடாவுக்குக் குடிபெயரத் தொடங்கியது ................ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான்.**

அ) 1958 **ஆ) 1983** இ) 1993 ஈ) 1964

☆☆☆

# இயல் 1 அமுதென்று பேர்

# எழுத்து - அளபெடை

கற்கண்டு

**சார்பெழுத்து**

✔ முதல் எழுத்துகளைச் சார்ந்து வருகின்ற எழுத்துகளுக்குச் **சார்பெழுத்துகள்** என்று பெயர்.

✔ சார்ந்து வருகின்ற காரணத்தினாலும் **தனித்து இயங்காத தன்மையைக்** கொண்டுள்ளதாலும் இந்த எழுத்துகளுக்கு இப்பெயர் ஏற்பட்டது என்று கூறுவர்.

✔ சார்பெழுத்துகள் **பத்து** வகைப்படும்.

**உயிரளபெடை**

செய்யுளில் இலக்கணம் கெடும்போது அல்லது ஓசை குறையும்போது அவற்றை நிறைவு செய்ய **நெடில்** எழுத்தை நீண்டு ஒலிக்கச்செய்வது **உயிரளபெடை** எனப்படும். அளபெடைக்கு அடையாளமாக நெடிலெழுத்து தனக்கு இனமான **குறிலைப்** பெறும்.

**உயிரளபெடையின் வகைகள்**

உயிரளபெடை **மூன்று** வகைப்படும்.

1. இசைநிறை அளபெடை அல்லது செய்யுளிசை அளபெடை
2. இன்னிசை அளபெடை
3. சொல்லிசை அளபெடை

**செய்யுளிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவு செய்ய நெட்டெழுத்துகளான **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** இவை **ஏழும்** அளபெடுக்கும். அவ்வாறு அளபெடுக்கும் போது நெட்டெழுத்துகளுக்கு இனமான **குறில்** எழுத்துகள் பக்கத்தில் எழுதப்படும்.

எடுத்துக்காட்டு:

ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
உறாஅர்க் குறுநோய் - மொழியிடை
நல்ல படாஅ பறை - மொழியிறுதி

**இன்னிசை அளபெடை**

செய்யுளி ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காகக் குறில் நெடிலாக அளபெடுப்பது **மூவசைச் சீர்களாக** மட்டும் வரும்.

எடுத்துக்காட்டு:

கெடுப்|பதூ|உம் – இதில் மூன்று அசைகள் உள்ளன. கெடுப் – ஓர் அசை, பதூ – ஓர் அசை, உம் – ஓர் அசை ஆக இதில் மூன்று அசைகள் உள்ளன. கெடுப்பதூஉம் – இச்சொல்லில் 'உ' என்னும் உயிர் எழுத்து வந்துள்ளது. மூன்று அசைகள் வந்துள்ளன. எனவே இது **இன்னிசை அளபெடை** என்பர்.

**சொல்லிசை அளபெடை**

பெயர்ச்சொல் அளபெடுத்து வினையெச்சப் பொருளில் வரும். **இ**– என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும்.

எடுத்துக்காட்டுகள்: உறனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

**ஒற்றளபெடை**

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துக்களான **ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்** ஆகிய பத்தும் ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

எடுத்துக்காட்டு: எங்கிறைவன், எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்

## கற்பவை கற்றபின்

1. **திருக்குறளில் அளபெடைகளைக் கண்டறிந்து ஒப்படைவு ஒன்றினைத் தயார் செய்க.**

**செய்யுளிசை அளபெடை:-**

இது, செய்யுளில் ஓசை குறையும்போதும், சீரும் தளையும் சிதையும் போதும், அசையை நிறைப்பதற்காக அளபெடுக்கும்.

**எ. கா:**

" ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை,
ஆஅதும் என்னு மவர். ". **(குறள் 653)**

இக்குறளில் 'ஓ' என்னும் உயிர்நெடில் தனக்குரிய இனக்குறில் 'ஒ' வை அளபெடுத்துள்ளது. இரண்டாவது அடியில் 'ஆ' என்னும் உயிர்நெடில் தனக்கு இனமான 'அ' குறிலை அளபெடுத்துள்ளது.

**இன்னிசை அளபெடை:-** இன்னிசை அளபெடை என்பது, செய்யுளில் ஓசையோ அசையோ குறையாத போதும் அளபெடுப்பது ஆகும்.

**எ. கா:**

" கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.". **(குறள் 15)**

**சொல்லிசை அளபெடை:-**

செய்யுளில் ஓசை குறையும்போதும், ஒரு பெயர்ச்சொல்லை வினையெச்சச் சொல்லாக மாற்றுவதற்கு அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

**எ. கா:**

" உரனசைஇ உள்ளந் துணையாகச் சென்றார்;
வரனசைஇ நின்று முளேன்." **(குறள் 1263)**

## திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

**3. பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது?**

அ) குக்கூஉ எனக் குயில் கூவியது ஆ) கொக்கரக்கோஒ எனச் சேவல் கூவியது
இ) அண்ணாஅ என அழைத்தான் ஈ) ஓடி வா ஓடி வா

**விடை: ஈ) ஓடி வா ஓடி வா**

### குறுவினா

**6. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

(i) அளபெடை இரண்டு வகைப்படும். அவை
(ii) உயிரளபெடை, ஒற்றளபெடை.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. 'ஓஒதல் வேண்டும்' என்பது எவ்வகை அளபெடையாகும்?**

**அ) செய்யுளிசை அளபெடை** ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

**2. செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் அளபெடுப்பது**

அ) ஒற்றளபெடை **ஆ) இன்னிசை அளபெடை**
இ) செய்யுளிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

**3. செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாக திரிந்து அளபெடுப்பது .............. .**

அ) ஒற்றளபெடை **ஆ) செய்யுளிசை அளபெடை**
இ) சொல்லிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை

**4. சார்பெழுத்துகள் .............. வகைப்படும்.**

**அ) 10** ஆ) 5 இ) 4 ஈ) 6

### குறுவினா

**1. செய்யுளிசை அளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் நீண்டு ஒலிப்பது செய்யுளிசை அளபெடை எனப்படும். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

**சான்று :** ஓஒதல் வேண்டும் – மொழி முதல்
உறாஅர்க்கு உறுநோய் – மொழியிடை
நல்ல படாஅ பறை – மொழியிறுதி



www.surabooks.com

**2. இன்னிசை அளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும். **சான்று :** கெடுப்பதூஉம் , எடுப்பதூஉம்

**3. சொல்லிசை அளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லிகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

**சான்று :** உறனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

**4. ஒற்றளபெடை என்றால் என்ன?**

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகள் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

**சான்று :** எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃ குவார்க்கில்லை வீடு.

**5. அளபெடுக்கும் ஒற்றெழுத்துகள் யாவை?**

**அளபெடுக்கும் ஒற்றெழுத்துகளாவன:**

**மெய்யெழுத்துகள்:** ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல்,ள்

**ஆய்த எழுத்து :** ஃ

**6. அளபெடுத்தல் என்றால் என்ன? அது எதற்குப் பயன்படுகிறது?**

(i) அளபெடுத்தல் – நீண்டு ஒலித்தல்.

(ii) பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.

☆☆☆

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க.** காலாண்டுத் தேர்வு 2019, 2023; ஏப்ரல் 2023

1. Linguistics - மொழியியல்
2. Literature - இலக்கியம்
3. Philologist - மொழியறிவியலாளர்
4. Polyglot - பன்மொழியாளர்
5. Phonologist - ஒலிச் சின்ன வல்லுநர்
6. Phonetics - ஒலியியல்

**அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.** அரையாண்டுத் தேர்வு 2023

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் .................(திகழ்) விடை: **திகழ்கிறது**
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் .........(கலந்துகொள்) விடை: **கலந்துகொள்வாள்**
3. உலகில் மூவாயிரம் மொழிகள் ............... (பேசு) விடை: **பேசுகின்றனர்**
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ................(செல்) விடை: **செல்கின்றனர்**
5. தவறுகளைத் ..................(திருத்து) விடை: **திருத்துகிறான்**



www.surabooks.com

**வடிவம் மாற்றுக.**

**பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேல்நிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணி ஆற்றி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த "உள்ளங்கையில் உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜுன் திங்கள், பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் முன்னாள் மாணவர் இன்சுவை (கின்னஸ் சாதனை படைத்த) நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

**விடை:**

## அறிவிப்புப் பலகை

அரசு மேனிலைப் பள்ளி
மருதூர்.
நூல் வெளியீட்டு விழா,

வணக்கம்! இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப் பணியை வழங்கி வரும் நம் பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. நம் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த "உள்ளங்கை உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜுன், திங்கள் பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. முன்னாள் மாணவர் இன்சுவை (கின்னஸ் சாதனை படைத்தவர்) நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார்.

மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

பள்ளி நிர்வாகம்

**தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.**

1. இளமையில் கல்வி **முதுமையில் இன்பம்** — காலாண்டுத் தேர்வு 2023
2. சித்திரமும் கைப்பழக்கம் **செந்தமிழும் நாப்பழக்கம்**
3. கல்லாடம் படித்தவரோடு **இணக்கமாக இரு**
4. கற்றோர்க்குச் சென்ற **இடமெல்லாம் சிறப்பு** — காலாண்டுத் தேர்வு 2023

**கடிதம் எழுதுக.**

**உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய 'கால்முளைத்த கதைகள்' (ஆசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.** ※

காலாண்டுத் தேர்வு 2019, 2023; அரையாண்டுத் தேர்வு 2019, ஏப்ரல் 2024

சென்னை.
20-06-20XX.

அன்புள்ள நண்பா,

நான் இங்கு நலமாக இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்? உன் அண்ணன், அப்பா, அம்மா மற்றும் தாத்தா அனைவரும் நலமாக உள்ளனரா?

என்னுடைய பிறந்த நாள் பரிசாக நீ அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் மிகவும் நன்றாக உள்ளது. அதில் உள்ள எண்பது கதைகளையும் படித்தேன். அக்கதைகளைப் படிப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது.


www.surabooks.com

அதனால் புத்தகம் என் கைக்கு வந்து ஒரு மணி நேரத்திற்குள் படித்து முடித்துவிட்டேன். பிறகு என் தங்கைக்கும் அக்கதைகளைச் சொன்னேன்.

இந்நூலாசிரியர் இந்நூலைப் புதுவிதமாக உருவாக்கியுள்ளார். நாட்டுப்புற இலக்கியம் போன்று உலகமெங்கும் உள்ள முப்பது பழங்குடியினர்கள் சொன்ன கதைகளிலிருந்து தேர்வு செய்து இத்தொகுப்பினை உருவாக்கியுள்ளார். இந்நூலில் உள்ள கதைகள் இயற்கையாக நிகழ்கின்ற நிகழ்வுகளுக்கெல்லாம் ஒரு காரணம் இருப்பது போன்று அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் விரும்பி படிக்கும்படி எளிய சொற்களால் சிறு சிறு கதைகளாக அமைந்துள்ளது.

ஆப்பிரிக்கா கதை, கொலம்பியா நாட்டுக்கதை, நியூசிலாந்து கதை, சீனா கதை எனப் பல கதைகள் கூறப்பட்டுள்ளது. எனக்கு இந்நூலில் உள்ள கதைகள் மிகவும் பிடித்திருந்தது. உனக்கு விடுமுறை உள்ளபோது எங்கள் வீட்டிற்கு வா.

உங்கள் வீட்டில் உள்ள அனைவரையும் நான் விசாரித்ததாகக் கூறு. இக்கடிதம் கிடைத்ததும் எனக்கு நீ கடிதம் எழுது.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
கபிலன்.

**உறைமேல் முகவரி**

**பெறுநர்:**
க.பிரபு,
எண் –15, சித்திரை தெரு,
மதுரை.

## நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.

**உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.** காலாண்டுத் தேர்வு 2019



**கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.**

**கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவை இடம்பெற வேண்டும்.**

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில் ※
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே! – ம.இலெ.தங்கப்பா

**திரண்ட கருத்து:**

| திரண்ட கருத்துப் பாடலின் முழுமையை உணர்த்தும் |
|---|

விரிந்து இருக்கின்ற நெடிய வானத்தில், பரந்த கடற்பரப்பில், விண்ணைத் தொடுமாறு உயர்ந்து நிற்கின்ற பெரிய மலையில், பள்ளத்தாக்குகளில் பொழிகின்ற நீரருவிச் சோலையில், காடுகளில், புல்வெளியில், பயிர்விளையும் நல்ல வயலில், விலங்கினங்களில், பறவையினங்களில் மற்றும் கண்ணுக்குத் தெரிகின்ற எல்லாப் பொருள்களிலெல்லாம் சிறப்புடன் விளங்கி உள்ளத்தில் திகட்டாத நுண்மையான பாட்டே, தூய்மையான ஊற்றே, அழகு என்று சொல்லத்தக்க பேரொழுங்கே, மெய்யே, மக்களின் உள்ளத்திலும் நீ குடியிருக்க வேண்டுமென்று இயற்கையை வேண்டுகிறார் ஆசிரியர்.

**மையக் கருத்து:**

| மனதைத் தொடுவது மையக்கருத்து |
|---|

இயற்கையின் வளத்தையும் அழகையும் மக்களின் உள்ளங்களில் குடியிருக்க வேண்டுமென ஆசிரியர் கூறுகிறார்.

**மோனைத்தொடை :**

| படைக்கு அழகு யானை<br>பாடலுக்கு அழகு மோனை |
|---|

அடியிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி வருவது மோனை.

விரிகின்ற – விண்ணோங்கு
பொழிகின்ற – புல்வெளியில்
தெரிகின்ற – தெவிட்டாத
அழகு – அகத்திலும்

**இயைபுத்தொடை :**

| செய்யுளின் இயைபு<br>படிப்போர்க்கு வியப்பு |
|---|

அடிகளிலோ சீர்களிலோ கடைசி எழுத்தோ சொல்லோ ஒன்றி வருவது இயைபுத் தொடை.

கடற்பரப்பில், பள்ளத்தாக்கில், காட்டில், புள்ளில், நெஞ்சில்

**அணிநயம் :**

| |
|---|
| **கோவிலுக்கு அழகு மணி** |
| **செய்யுளுக்கு அழகு அணி** |

இயற்கையழகு எங்கெல்லாம் விரவியுள்ளது என்பதை ஆசிரியர் உள்ளதை உள்ளவாறு இயல்பாகக் கூறியுள்ளதால் இதில் இயல்பு நவிற்சியணி பயின்று வந்துள்ளது.

☆☆☆



## மொழியோடு விளையாடு

**அந்தாதிச் சொற்களை உருவாக்குக.** காலாண்டுத் தேர்வு 2023

**அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.**

அத்தி, திகைப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைபேசி, சிறப்பு, புதுமை, மைனா

குருவி, விரும்பு, புகை, கைவீசு, சுமை

விருது, துவர்ப்பு, புகழ்ச்சி, சிறகு, குடிமை

இனிப்பு, புளிப்பு, புவி, விருப்பு, புன்னகை

வரிசையாக, கடம்பு, புரட்சி, சிறுமை

**கொடுக்கப்பட்டுள்ள வேர்ச்சொல்லைப் பயன்படுத்தி விடுபட்டுள்ள கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.**

| வா | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| நான் | வந்தேன் | **வருகிறேன்** | **வருவேன்** |
| நாங்கள் | **வந்தோம்** | **வருகிறோம்** | வருவோம் |
| நீ | **வந்தாய்** | வருகிறாய் | **வருவாய்** |
| நீங்கள் | வந்தீர்கள் | **வருகிறீர்கள்** | **வருவீர்கள்** |
| அவன் | **வந்தான்** | வருகிறான் | **வருவான்** |
| அவள் | **வந்தாள்** | **வருகிறாள்** | **வருவாள்** |
| அவர் | வந்தார் | **வருகிறார்** | **வருவார்** |
| அவர்கள் | **வந்தார்கள்** | **வருகிறார்கள்** | **வருவார்கள்** |
| அது | **வந்தது** | **வருகிறது** | வரும் |
| அவை | **வந்தன** | வருகின்றன | **வரும்/வருவன** |




www.surabooks.com

www.surabooks.com



**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**மீன் தொட்டி**

சூரிய வெளிச்சம்

முதுகை தொடும்
வெப்பத்தை அறியா
தொட்டி மீன்களே!
தன்னிடம் இருக்கும்
குறுகிய எல்லையை
தொலைவாக எண்ணி
நீந்திக் கொண்டிருக்கும்!

உன்னிடம் எவ்வாறு கூறுவேன்?

கடல் அன்னையைப் பற்றி...

**அகராதியில் காண்க.**

1. நயவாமை – விரும்பாமை, புகழாமை
2. கிளத்தல் – கூறுதல்
3. கேழ்பு – நன்மை
4. செம்மல் – பெருமையிற் சிறந்தவன்
5. புரிசை – மதில், மதிற்சுவர்

**செயல் திட்டம்**

**நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளைப் பட்டியலிட்டு அம்மொழி பேசப்படுகின்ற இடங்களை நிலப்படத்தில் வண்ணமிட்டுக் காட்டுக.**

நான் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகள்.

| மொழி | இடம் |
|---|---|
| 1. தமிழ் | தமிழ்நாடு |
| 2. தெலுங்கு | ஆந்திர மாநிலம் |
| 3. கன்னடம் | கர்நாடகம் |
| 4. மலையாளம் | கேரளா |




www.surabooks.com

## நிற்க அதற்குத் தக

**உங்களுடைய நாள்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன். பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | **என் தங்கையுடன் சண்டையிடாமல் சமாதானமாகப் பேசினேன். இருவரும் சேர்ந்து விளையாடினோம்.** |
| புதன் | **என் வீட்டிற்கு உறவினர் வந்தனர். அவர்களை வரவேற்றேன். நாற்காலியில் அமரச் சொன்னேன். தண்ணீர் கொடுத்தேன்.** |
| வியாழன் | **அம்மா மருத்துவமனை சென்றிருந்தார். அவர்கள் வருவதற்குள் வீட்டில் உள்ள வேலைகளைச் செய்து முடித்தேன். அப்பா என்னைப் பாராட்டினார்.** |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | **காலையில் அப்பாவுடன் நடைப் பயிற்சி செய்தேன். அப்பாவின் நண்பர் என்னைப் பற்றி புகழ்ந்து பேசினார்.** |
| ஞாயிறு | **அப்பாவின் இரு சக்கர வாகனத்தைச் சுத்தம் செய்தேன். வீட்டில் சன்னல், கதவு போன்றவற்றைத் துடைத்தேன். புத்தகங்களை அடுக்கி வைத்தேன்.** |

### படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | |
|---|---|
| Comparative Grammar – ஒப்பிலக்கணம் **கா.தேர்வு 2019** | Vowels – உயிரொலிகள் |
| Lexicon - பேரகராதி | Consonants – மெய்யொலிகள் |

### அறிவை விரிவு செய்

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் – ராபர்ட் கால்டுவெல் **காலாண்டுத் தேர்வு 2019**
2. மொழிப்பெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் தமிழ்நடைக் கையேடு – மணவை முஸ்தபா

☆☆☆

www.surabooks.com

## மாதிரிக் கடிதம்

அனுப்புநர்

மு. மகிழன்,
ஒன்பதாம் வகுப்பு - 'அ' பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சின்கோனா,
வால்பாறை- 642 106.

பெறுநர்

வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
ஒன்பதாம் வகுப்பு - 'அ' பிரிவு,
அரசு உயர்நிலை ப்பள்ளி,
சின்கோனா,
வால்பாறை- 642 106.

ஐயா,

**பொருள் :** பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி-விண்ணப்பித்தல் சார்பு.

வணக்கம். என் தாயார் உடல்நிலை பாதிக்கப்பட்டு வீட்டில் உள்ளார். நான், இன்று மாலை நான்கு மணிக்கு அம்மாவை மருத்துவப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, இன்று மாலை மூன்று மணிக்குப் பள்ளி நேரம் முடிவதற்கு முன்பே வீட்டிற்குச் செல்ல எனக்கு அனுமதி வழங்குமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள மாணவன்,
சின்கோனா

12-6-2025
பெற்றோர் கையொப்பம்
XXXXXXX

www.surabooks.com

# அலகுத் தேர்வு

**நேரம் : 45 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. தமிழ்விடு தூது ................. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது?
   அ) ஈரோடு தமிழன்பன் ஆ) கால்டுவெல்
   இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
3. பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது?
   அ) குக்கூஉ எனக் குயில் கூவியது ஆ) கொக்கரக்கோஒ எனச் சேவல் கூவியது
   இ) அண்ணாஅ என அழைத்தான் ஈ) ஓடி வா ஓடி வா
4. சிந்தாமணி என்பதன் இலக்கணக் குறிப்பு
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
6. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
7. அளபெடை எத்தனை வகைப்படும், அவை யாவை?
8. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 3 = 6)

9. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
10. தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.
11. 'புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்' – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. தித்திக்கும் .................என்று தொடங்கும் தமிழ்விடு தூது பாடலை எழுதுக.

**V. விடையளிக்க.(ஏதேனும் ஒன்று)** (1 × 8 = 8)

13. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், 'கால்முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.
14. புலம் பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என்பதை ஆறாம் திணை வாயிலாக விவரிக்க.

☆☆☆

www.surabooks.com